தலைமுறையைத் தாண்டும் தமிழ்

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்

AMERICAN TAMIL ACADEMY

முதல் ஆண்டு விழா மலர்

நவம்பர் 23, 2019, சார்லட், வட கரோலைனா



தமிழால் இணைவோம்! தலைமுறைக்கும் தொடர்வோம்!!



தொகுப்பு: மேகலை எழிலரசன்

வடிவமைப்பு: எழில் பாலா

தலைமுறையைத் தாண்டும் தமிழ்

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்

AMERICAN TAMIL ACADEMY

முதல் ஆண்டு விழா மலர்

நவம்பர் 23, 2019, சார்லட், வட கரோலைனா



தமிழால் இணைவோம்! தலைமுறைக்கும் தொடர்வோம்!!

அ.த.க தலைவரிடமிருந்து...



அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் தன்னுடைய பத்தாவது ஆண்டைக் கொண்டாடுவதையொட்டி "தலைமுறைத் தாண்டும் தமிழ்" என்கிற கருப்பொருளைக் கொண்டு நடைபெறும் அ.த.க வின் முதல் ஆண்டு விழாவின் தொகுப்பே இந்த மலர். இவ்வாண்டு விழா சார்லட், வட கரோலினாவில் நவம்பரில் நடைபெறுகிறது. "முயற்சி திருவினை யாக்கும்" என்ற வள்ளுவரின் வாக்கு பொய்க்கவில்லை. துவங்க சற்று தாமதமானாலும், இனி வரும் ஒவ்வொரு வருடமும் அ.த.க வின் ஆண்டு விழா அமெரிக்காவின் வெவ்வேறு பகுதிகளில் நடத்தப்பட உள்ளது. உலகத்தில் இன்றும் உயிர்ப்புடன் இருக்கும் ஒரே தொன்மையான மொழியாம் நம் தாய் மொழி தமிழை, நம் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல உதவும் களமாகவும், அமெரிக்காவில் வெவ்வேறு இடங்களில் வசிக்கும் தமிழர்களை இணைக்கும் பாலமாக இவ்விழா இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

என்ற பாரதியின் சீரிய வாக்கினை மெய்ப்பிக்கும் விதமாக செய்யப்பட்டு கொண்டிருக்கும் அ.த.க பள்ளிகளை சார்ந்த பெற்றோர், ஆசிரியர், மாணாக்கர், அ.த.க. நிர்வாகிகள், மொழியியல் வல்லுநர்கள், பேராசிரியர்கள், மொழிப்பற்றாளர்கள் மற்றும் அயராது தொண்டாற்றி வரும் தன்னார்வலர்கள் என அனைவரையும் தமிழ் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தி அவர்தம் சேவைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர இந்த விழா பெரும் பங்காற்றும் என்பது திண்ணம். அமெரிக்கா மட்டுமல்லாது, கனடா, தைவான், துபாய் போன்ற நாடுகளில் உள்ள பள்ளிகளும் நமது பாடத்திட்டத்தை பயன்படுத்துகின்றனர். ஜெர்மனி மற்றும் நியூஸிலாந்திலிருக்கும் பள்ளிகள் வரும் வருடத்தில் நம்மோடு இணையவிருக்கிறார்கள். எனவே வரும் காலங்களில் இது உலகளாவிய தமிழர்கள் ஒன்று கூடும் நிகழ்வாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அயல் மண்ணில் தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலும் இளம் மாணாக்கர்களின் படைப்புகள், தமிழைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் எழுத்து வண்ணங்கள், பயிற்றுவிப்பதில் அனுபவம் வாய்ந்த பேராசிரியர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் பல்கலைக்கழக மாணாக்கர்களின் கட்டுரைகள் ஆகியவற்றைத் தாங்கி இந்த இதழ் வெளிவந்திருக்கிறது. பல மலர்களில் இருந்து பெறப்பட்ட தேனின் இனிமை போல இப்படைப்புகள் உங்கள் தமிழ் உணர்வுக்கு விருந்தாக இருக்கும் என்பது உறுதி.

கடந்த ஆண்டு நமது பாடத்திட்டம் எளிமையாக்காப்பட்டு முன்மழலை தொடங்கி மூன்றாம் நிலை வரையிலான புத்தகங்கள் முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டு வெளியிடப்பட்டது

வெளியிடப்பட்டது. இந்த மலர் உங்கள் கரங்களில் தவழ்ந்துகொண்டிருக்கும் அதே வேளையில் நான்காம் நிலை முதல் எட்டாம் நிலை வரையிலான புத்தகங்களும் மாற்றி எழுதத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

ஆண்டு விழா ஓரிரு நாட்களில் முடியும் நிகழ்வானாலும் இங்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகள் வரும் காலத்தில் பெரிய நேர்மறை தாக்கங்களை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இன்பத்தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்
துன்பங்கள் நீங்கும், சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மையுண்டாகிடும், வீரம் வரும்!

என்ற பாவேந்தர் பாரதிதாசன் வாக்கு அ.த.க - விற்கு வேதவாக்கு. அ.த.க. பாடத்திட்டத்தை பயன்படுத்தும் பள்ளிகளில் முன்மழலையில் சேரும் அனைத்துக் குழந்தைகளும் இலகுவாக, கூடுதல் சுமை இன்றி எட்டாம் நிலை வரை முடித்து இருமொழி முத்திரை வாங்க வைக்க வேண்டும் என்பதே இப்போது எங்கள் முன் இருக்கும் ஒரே சவால். குறிக்கோள். அதை நோக்கிய பயணத்தின் மற்றுமொரு மைல் கல்லான நமது முதல் ஆண்டு விழாவின் மலர் உங்கள் கரங்களில் தவழ்வது எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

நன்றி,

மேகலை எழிலரசன்



வரவேற்பு




American Tamil Academy
American Tamil Academy(ATA)
First Annual Day
Charlotte, NC


ATA
தமிழ்










American Tamil Academy


American Tamil Academy


American Tamil Academy (ATA)
First Annual Day


American Tamil Academy (ATA)
First Annual Day




IL ACADEMY


AMER N TAMIL



அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்

2018-19 நிர்வாகக்குழு

திருமதி. **மணிமேகலை எழிலரசன்**	தலைவர்
திரு. **கருப்பையா மாணிக்கவாசகம்**	துணைத் தலைவர்
திரு. **இளங்கோ திருப்பதி**	செயலாளர்
முனைவர் **அரசு செல்லையா**	இணை செயலர்
திரு. **பூபதி சாமிக்கண்ணு**	பொருளாளர்
திருமதி. **கீதா சரவணராஜன்**	இணை பொருளர்
திரு. **தினகர் கருப்புசாமி**	இயக்குனர்
முனைவர் **கபிலன் வெள்ளையா**	இயக்குனர்
திரு. **மணிவண்ணன் பெரியகருப்பன்**	இயக்குனர்
முனைவர் **ரவி பழனியப்பன்**	இயக்குனர்
முனைவர் **சிவக்குமார் இராமச்சந்திரன்**	இயக்குனர்
திரு. **முஹைதீன் சயீத்**	இயக்குனர்
முனைவர் **வாசு ரெங்கநாதன்**	இயக்குனர்
திருமதி. **விசாலாட்சி வேலு**	இயக்குனர்
திரு. **பாஸ்கர் வையாபுரி**	இயக்குனர்

2018-19 அறங்காவலர் குழு

திரு. **பாலா சுவாமினாதன்**	திரு. **அருள் வீரப்பன்**
திரு. **நாகராஜ சேதுராமன்**	திரு. **பொற்செழியன் ராமசாமி**
திரு. **சொர்ணம் சங்கர்**	திருமதி. **ரேணுகா குமாரசாமி**
திரு. **செல்வன் பச்சமுத்து**	

இலட்சியம்:

பள்ளி மாணவரும், ஏனையோரும் செம்மொழியாம் தமிழ்மொழிக் கல்வியினை பயின்று திளைத்து, மொழிக்கான மதிப்பீட்டுச் சான்றுகளைப்பெற, வழிவகை செய்து ஊக்கப்படுத்துவதே அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகத்தின் இலட்சியமாகும்.

அ.த.க. மற்றும் அதன் சேவைகள் பற்றிய முக்கிய தகவல்கள்:

- தோற்றம் 2009
- 100-க்கும் மேற்பட்ட பள்ளிகள்
- 3 கண்டங்கள்
- பிரத்தியேக மென்பொருள்
- பருவத்தேர்வு வினாத்தாள்கள்
- 10,000 - க்கும் அதிகமான மாணாக்கர்கள்
- முன்மழலை முதல் நிலை 8 வரை என 10 நிலைகள்
- பகுதி வாரியாக நேரிடை ஆசிரியர் பயிற்சி
- 20 பாடங்களுடன் பாடம் மற்றும் பயிற்சி புத்தகங்கள்
- நிலை தேர்ச்சி சான்றிதழ்கள்

வளாகம்



அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்
(அ.த.க.)

10ஆம் ஆண்டு நிறைவடைந்ததைக் கொண்டாடும்

முதல் ஆண்டு விழா

நவம்பர் 23 & 24, சார்லட், வட கரோலைனா

அமெரிக்காவில் தமிழ்க்கல்வி குறித்து ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் ஒரு உரையாடல்

அ.த.க. ஆண்டு விழா சிறப்பு விருந்தினர்கள்



முனைவர். பாரதி. எஸ்
கலிபோர்னியா பல்கலைக்கழகம், பெர்க்கிலி
"அமெரிக்காவில் தமிழ்க்கல்விக்கான பாட நூற்களை வடிவமைத்தல் - சிக்கல்களும், சவால்களும்"



முனைவர். அனந்தகிருட்டிணன் பாலகிருட்டிணன்
டெக்ஸாஸ் பல்கலைக்கழகம், ஆஸ்டின்
"புலம்பெயர்ந்தோரிடையே தமிழ்க்கல்வி - இந்தியாவிலும், அமெரிக்காவிலும்"



முனைவர். வாசு அரங்கநாதன்
பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம், பிலடெல்பியா
"இருமொழி முத்திரையின் வழி அமெரிக்காவில் தமிழ்க்கல்விக்கு ஊக்கம்"



Memory Workshop by
KAVANAGAR
DR. KALAI CHEZIYAN

கவனகம் is an art / technique of multi-tasking by the mind. It will be of great help in our modern day educational activities, learning methodologies and personality development programs. Students who are trained to do this parallel processing in mind / brain can go ahead of their peers in their education, competitive exams like SAT and career

DEMO AND WORKSHOP FOR :
- How to do Kavangam
- General Memory tips

He is going to teach some of these techniques to our kids.

தலைமுறையைத் தாண்டும் தமிழ் !!

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்
(அ.த.க.)

10ஆம் ஆண்டு நிறைவடைந்ததைக் கொண்டாடும்

முதல் ஆண்டு விழா

நாள் : நவம்பர் 23, சார்லட், வட கரோலைனா
நேரம் : காலை 10.00 மணி முதல் 6.00 மணி வரை
இடம் : Cox Mill High School, 1355 Cox Mill Rd, Concord, NC 28027

இன்றைய தலைமுறைக்கான இனிய தமிழ் !
அமெரிக்காவில் இரண்டாம் மொழி கற்றல் !
இருமொழி முத்திரை அறிதல் !
தமிழ்க் கல்வியாளர்களுடன் கலந்துரையாடல் !
தமிழ் விருதுகள் மற்றும் கலை நிகழ்வுகள் !

- பல்கலைக்கழக தமிழ் பேராசிரியர்களுடன் அமெரிக்காவில் தமிழ்க் கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான சிறந்த உத்திகளை கையாளுதல் குறித்தான ஒரு கலந்துரையாடல்
- நெடுநாள் ஆசிரியர் விருது மற்றும் அ.த.க. செந்தமிழ்ச்செல்வன், அ.த.க. செந்தமிழ்ச்செல்வி விருதுகள்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
நமது தொன்மைத் தமிழ் என்றென்றும் நிலைத்திருக்க
அன்புடன் அழைக்கிறோம் வாரீர்! வாரீர்! வாரீர்!

தொடர்புக்கு : President@amtaac.org

தமிழால் இணைவோம்! தலைமுறைக்கும் தொடர்வோம் !!

உரைகள்











விழாக் குழுக்கள்

அ.த.க முதல் ஆண்டு விழா

ஒருங்கிணைப்புக் குழு

முனைவர் வாசு அரங்கநாதன்
திருமதி. மேகலை எழிலரசன்
திரு. கரு. மாணிக்கவாசகம்
முனைவர் அரசு செல்லையா
முனைவர் சிவக்குமார் இராமச்சந்திரன்
திரு. தினகர் கருப்புசாமி

மலர் ஒருங்கிணைப்பு:
ரவீந்திரன் கிருஷ்ணசாமி
இரம்யா ரவீந்திரன்
கம்சலாதேவி செந்தில்

பள்ளி ஒருங்கிணைப்பு:
எழிலரசன் பாலா
சிவக்குமார் சண்முகம்
சௌந்தர்ராஜன் கனகராஜன்

அரங்க அலங்காரம்: ரகுநாத் சங்கரநாராயணன்
சுதா கிருஷ்ணா
சுரேகா ஓம்குமார்
சித்ராதேவி முருகன்
அசோக்குமார் சேகர்
இளையபெருமாள் கணபதி
ஆனந்த் திருநாராயணன்

குழந்தைகள் விளையாட்டு: சுரேகா ஓமகுமார்
சௌம்யா
ரம்யா கார்த்திகேயன்
வினுப்ரியா சரவணன்
ரேகா விஷ்ணு
அகிலா

அங்கீகாரம்: சுதாகர் கிருஷ்ணமூர்த்தி
ஜெயஸ்ரீ ஸ்ரீதர்
ஜோதி வெங்கடேஷ்

நிகழ்ச்சி வடிவமைப்பு:
சுதாகர் கிருஷ்ணமூர்த்தி

வர்ணனையாளர்கள்:
இரம்யா ரவீந்திரன்
உமாமகேஸ்வரி ரகுநாத்
ஜோதிலட்சுமி வெங்கடேஷ்

மேடை நிர்வாகம்: கார்த்திகேயன் பெருமாள்

ஒலி & ஒளி:: இளையபெருமாள் கணபதி

ஊடகம்: திவ்யா தமிழரசு

காணொளி & புகைப்படங்கள்:
முருகன் நடேசன்
ஆனந்த் திருநாராயணன்
சசிகுமார் மூர்த்தி
சௌந்தர்ராஜன்
விஜய் தண்டபாணி
விஷ்ணு காந்தி
அசோக்குமார் சேகர்
ராஜமுகேஷ் ராஜசேகரன்
ஆனந்த் மாதவன்
ரமேஷ்பாபு ரகுநாதன்

உபசரித்தல்:
எழிலரசன் பாலா
மேகலை எழில்
சசிகுமார் மூர்த்தி
செந்தில்குமார் தியாகராஜன்

உணவு: சுரேஷ் தயாளன் & சீனிவாசப்பிரபு
உணவு வழங்கல்: முருகன் நடேசன்

அகரம் தமிழ்ப் பள்ளி சார்லட், வட கரோலினா



அகரம் தமிழ்ப் பள்ளி மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன்

எனக்குப் பிடித்த விளையாட்டு - கால்பந்து

தனபாலன் சௌந்தர்ராஜன் — நிலை 4



கால்பந்து உலகளவில் பிரபலமான விளையாட்டுகளில் ஒன்றாகும். 3000 ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கபட்டது. கிறிஸ்டியானோ ரொனால்டோ உலகின் சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவர். கால்பந்து உலகக்கோப்பை 2018 விளையாட்டு ரஷ்யாவில் நடைபெற்றது, அதில் 32 அணிகள் பங்கேற்றன. குரோஷியா மற்றும் ஃப்ரான்ஸ் இறுதி போட்டியில் விளையாடின. இதில் ஃப்ரான்ஸ் உலகக்கோப்பை 2018 வென்றது. குரோஷியா இரன்டாவது மற்றும் பெல்ஜியம் மூன்றாவது நிலைகளை பெற்றன. இந்த விளையாட்டுகளை காணொளியில் கண்டு ரசித்தேன். எனக்கு பிடித்த அணி போர்ச்சுகல். அடுத்த உலகக்கோப்பை விளையாட்டு கத்தாரில் 2022ஆம் ஆண்டு நடைபெற உள்ளது.

விடுகதைகள்

வர்ணிகா ஆனந்த் – நிலை 5



1. நடுக்காட்டுக்குள்ளே ஒரு சொட்டு ரத்தம். அது என்ன?
2. நிலத்திலே முளைக்காத செடி. நிமிர்ந்து நிற்காத செடி. அது என்ன?
3. அன்றாடம் மலரும். அனைவரையும் கவரும். இது என்ன?
4. பெட்டியை திறந்தாள் பூட்ட முடியாது. இது என்ன?
5. பையுடன் பிறந்தவள். குழந்தையை அதில் சுமக்கிறாள். அவள் யார்?
6. தொட்டால் சிணுங்கிக்கு தொண்ணூறு கால். அது என்ன?
7. சாடி மேலே குரங்கு. இது என்ன?
8. தந்தைக்கு முன்னே தரணியில் நிற்பான். யார்?
9. இத்துனூண்டு சிட்டு குருவிக்கு ஏழு முழம் சித்தாடை. அது என்ன?
10. இரவல் கிடைக்காதது. இரவில் கிடைப்பது. அது என்ன?
11. கையில் அடங்குவார். கதை நூறு சொல்லுவார். அவர் யார்?
12. வெள்ளை கோட்டைக்குள்ளே அண்ணன், தம்பி இருவர். அவர்கள் யார்?
13. நான் உடைந்தால் முறிவு என்பார்கள். நான் யார்?
14. வெந்து கரியாகி, விருந்து படைப்பான். அவன் யார்?
15. இவன் இருந்தாலும் தொல்லை. இல்லையென்றாலும் தொல்லை. அவன் யார்?

விடை : 1.ஒற்றுப் பிழை 2.புல் 3.தென்றல் 4.தேங்காய் 5.அங்காடி 6. மரவள்ளி 7.முற்றுப்புள்ளி 8.மின்மினிப்பூச்சி 9.ஒன்பதாம் 10.தூக்கம் 11.பிழைகள் 12. நிலவுகள் 13.சமூகம் 14.மழை 15.தூசி

பெர்சியாவில் சாகசம்

ப்ரநிகா செந்தில் - நிலை 5

ஒரு காலத்தில் டேரியஸ் என்ற பாரசீக மன்னனும், ஒலிவியா என்ற ராணியும் வாழ்ந்தார்கள். அவர்களின் முக்கிய எதிரியான மெக்கடோனியா 3000-க்கும் மேற்பட்ட பாரசீகர்களைத் தாக்கி கொன்றது. பெரும்பாலான பாரசீகர்கள் 2 வாரங்களில் மெக்கடோனியா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதால், டேரியஸ் மன்னர் மற்றும் ஒலிவியா ராணி தயாராக இருந்தனர்.

டேரியஸ் மன்னர் "என் அன்பான பெர்சியர்களே, எதிர்பாராத தாக்குதலுக்கு நாங்கள் மிகவும் வருந்துகிறோம், அந்த முட்டாள்தனமான மெகாடோனியர்களை பழிவாங்குவது எனது கடமை" என்று கூறினார். "ஆட்சியாளர்களின் பெயரை நான் அறிந்திருந்தால், நான் அவரை அழிப்பேன்". ஒலிவியா ராணி கூறினார்: "நாங்கள் பழிவாங்குவதற்காக வீரர்களை நியமிப்போம்; அந்த வீரார்களில் ஒருவராக பங்கு

பழிவாங்குவது எனது கடமை" என்று கூறினார். "ஆட்சியாளர்களின் பெயரை நான் அறிந்திருந்தால், நான் அவரை அழிப்பேன்". ஒலிவியா ராணி கூறினார்: "நாங்கள் பழிவாங்குவதற்காக வீரர்களை நியமிப்போம்; அந்த வீரார்களில் ஒருவராக பங்கு பெற விரும்பினால் திட்டத்தை விவாதிக்க நாளை காலை 11 மணிக்கு வாருங்கள். அனைத்து பாரசீகர்களும் ஆரவாரத்துடன் , "நாங்கள் வருவோம், நாங்கள் வருவோம் " என்று கோஷமிட்டனர்.

மறுநாள் காலை 11 மணிக்கு; காயமடைந்த வீரர்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பது குறித்து ஒலிவியா ராணி மருத்துவர்களுக்கு பயிற்சி அளித்தார், மேலும் மன்னர் இந்த திட்டத்தை வகுத்தார். வீரர்கள் அனைவரும் ஒவ்வொரு நாளும் சந்தித்து, தொடர்ந்து பயிற்சி பெற்றனர். ராஜாவும் ராணியும் தங்களுக்கு உதவ பாடுபடுவதை அவர்கள் உணர்ந்தார்கள்.



ஒரு நாள் இரவு மன்னர் மிகவும் தீவிரமாக ஒரு கடிதம் எழுதினார், வீரர்கள் அது என்ன என்று கேட்டார்கள், அது ஒரு தனிப்பட்ட விஷயம் என்று ராஜா கூறினார். அவர்களுக்கு ராஜா மீது சந்தேகம் எழுந்தது.

ஒலிவியா ராணி படையினரின் கவலையான முகங்களைக் கண்டு என்ன நடந்தது என்று கேட்டார், வீரர்கள் ராஜாவைப் பற்றி சொன்னார்கள். ராணி சந்தேகங்களை தவிர்க்க அவள் சோர்வடைந்து வீரர்களுக்கு ஆறுதல் பெரும் படி, போருக்கு ராஜா சட்டவிரோத குண்டுகளை வீச முயற்சிக்கிறார் என்று வீரர்களிடம் சொன்னாள்.

வீரர்கள் "ராஜாவிடம் அவர் எங்களுக்காக இவ்வளவு முயற்சி செய்ய வேண்டியதில்லை என்று சொல்லுங்கள்" என்றார். ராணி ஒரு குளிர் உருவகத்துடன் "எங்கள் நாட்டுக்கு உதவ நாங்கள் எதையும் செய்வோம்" என்றார்.

அவள் விலகிச் செல்லும்போது அவள் முகம் புளிப்புப் பாலின் நிறமாக மாறியது. படையினருக்கு இன்னும் 1 வாரங்கள் மட்டுமே இருந்தன, அவற்றின் விஞ்ஞானி மெகோனகல்ப்ரூக்டேல் அட்வென்ச்சர் கிட் பேக்கை உருவாக்கினார். அவர்கள் ஆபத்தான ப்ரூக்டேல் காட்டில் மெகடோனியாவுக்கு பயணிப்பார்கள் என்பதால், அவர்கள் ஒரு "பிரியாவிடை விருந்து" அருந்தி காட்டுக்கு சென்றனர்.

ஒலிவியா ராணி தனது மருத்துவர்களை சில மருத்துவ மூலிகைகள் பெற அழைத்துச் சென்றார், அதே நேரத்தில் ராஜா டேரியஸ் மற்றும் அவரது வீரர்கள் சென்றனர். ஒலிவியா ராணி "3 எண்ணிக்கையில், எல்லோரும் ஒரு செடியை இழுத்து அதை தங்கள் பைகளில் கட்டிக்கொள்ள வேண்டும்" என்றார். "1,2,3" என்று எண்ணியதற்குள் மருத்துவர்கள் அனைவரும் இறந்தனர்.அவர்கள் தொட்ட செடி "கில்லிவீட்" என்று அழைக்கப்படுவது அவர்களுக்குத் தெரியாது.

அந்த செடியை தொடும் தருணம் தொட்டவர்கள் சாம்பலாக மாறுவர். கிங் டேரிஸ் & ராணி ஒலிவியா மெகடோனியாவின் உளவாளி. அவர் காட்டில் குண்டு வைக்க மெசிடோனியர்களுக்கு ரகசிய கடிதம் எழுதினார். ராணிக்கு கில்லிவீட் பற்றி தெரியும் மற்றும் மருத்துவர்களைக் கொன்றார், அதனால் வீரர்கள் காயமடைந்தால் இறந்துவிடுவார்கள். ராணி ராஜ்யத்திற்குத் திரும்பி வந்து குடிமக்களைக் கவனித்துக் கொள்ளும்படி ராஜா சொன்னதாக மக்களிடம் கூறினார். விரைவில் வெடிகுண்டுகள் போய் படையினரைக் கொன்றன, ராஜா திரும்பி ஓடி, பணி வெற்றி என்று கூறியதுடன், வீரர்கள் துரதிர்ஷ்டவசமாக கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், உதவி செய்வது அவர்களின் வேலை என்றும், இப்போது அனைத்து பெர்சியர்களும் போரில் உள்ளனர் என்றும் கூறினார்! 300 ஆண்டுகளுக்கு முன்பு, பெர்சியர்கள் மெகடோனியாவைத் தாக்கினர், எனவே மெகடோனியா அதன் பழிவாங்களைப் பெற்றது. பழிவாங்க, மெகாடோனியர்கள் ஒரு உளவாளியை அனுப்பி அவரை அரசராக்கினர். பெர்சியர்கள் எப்போது உண்மையை அறிந்துகொண்டு தங்கள் நாட்டைப் பாதுகாப்பார்கள் என்பது காலத்திற்கு மட்டுமே தெரியும்.



எத்தனை வகையான பேச்சு!*

- பேசு*(speak)
- பகர்*(speak with data)
- செப்பு*(speak with answer)
- கூறு* (speak categorically)
- உரை* (speak meaningfuly)
- நவில்*(speak rhymingly)
- இயம்பு*(speak musically)
- பறை* (speak to reveal)
- சாற்று* (speak to declare)
- நுவல்* (speak with introduction)
- ஓது* (speak to recite)
- கழறு*(speak with censure)
- கரை*(speak with calling)
- விளம்பு*(speak with a message)

_தொல்காப்பியர் இத்தனை வகையான பேச்சுகளைக் குறிப்பிடுகிறார்.

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம்காணோம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

— நாலடியார்



அன்னைத் தமிழ்

கி. கிரிஷா – நிலை 5

தமிழ் மொழி தமிழர்களது "தாய் மொழி". 2500 ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபை கொண்டுள்ள மொழி. செம்மொழி என்ற அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

தமிழின் சிறப்பு: தமிழ் மொழியில் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற பல சிறப்பு வாய்ந்த நூல்கள் உள்ளன. உதடே ஒட்டாத குறள் எது தெரியுமா? "யாதளின் யாதளின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இல."



எந்தெந்த பொருள்களில் எல்லாம் மனமானது விலகி இருக்கிறதோ அந்தப் பொருள்களால் நமக்கு துன்பம் கிடையாது. இதுவே ஒரு சிறந்த சான்று.

தனித்தன்மை:

தமிழ் மொழியில் மட்டுமே எண்களின் எண்ணிக்கை ஒன்றிலிருந்து நூறு, கோடி, பதுமம், மகாயுகம் வரை உள்ளது. வேறு எந்த மொழியிலும் இத்தனை எண்களின் எண்ணிக்கை கிடையாது.

முதல் தலைமுறை, 2ம் தலைமுறை, பாட்டன், பூட்டன் என ஒரு தலைமுறை - சராசரியாக 60 வருடங்கள் ஏழு தலைமுறை - 480 வருடங்கள் ஈரேழு தலைமுறை - 960 வருடங்கள் ஆக பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் ஈரேழு பதினான்கு தலைமுறையை குறிக்கும். தமிழில் மட்டுமே இத்தனை உறவு முறைகள் உண்டு.

காரைக்குடியில் தமிழ்த்தாய்க்கு என கோவில் கட்டப்பட்டுள்ளது. தமிழ்த்தாயின் இரு புறமும் அகத்தியர் மற்றும் தொல்காப்பியர் சிலை உள்ளது.

தமிழ்த்தாய்:

தமிழ் மொழி மட்டுமே தன் மொழியையே தாயாக பார்க்கிறது. காரைக்குடியில் தமிழ்த்தாய்க்கு என கோவில் கட்டப்பட்டுள்ளது. தமிழ்த்தாயின் இரு புறமும் அகத்தியர் மற்றும் தொல்காப்பியர் சிலை உள்ளது.

தமிழ் மொழியானது தமிழர்கள் அனைவருக்கும் உயிரை போன்றது. ஐம்பெரும் காப்பியங்கள், அறுபத்து நான்கு கலைகள், திருமுறைகள், பதினென் கிழ்கணக்கு நூல்கள் என தமிழின் சிறப்பிற்கு அளவே கிடையாது.

இத்தகைய தமிழ் மொழி நம் தாய் மொழி என்பதில் நாம் அனைவரும் பெருமை அடைய வேண்டும்.

தமிழைக் குறித்து அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய குறிப்புகள்

சர்வேஷ் ரேகா விஷ்ணு — நிலை 4





தமிழைக் குறித்து அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய 5 குறிப்புகள்

1) தமிழ் மொழி 2,000 வருடங்கள் பழமை வாய்ந்தது. அதனால் தொன்மொழி என்று யுனெஸ்கோ(U N E S C O) -வினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2) தமிழ் என்ற சொல் அழகு, இனிமை, இயற்கை என்றும் பொருள்படும்.

3) தமிழகத்திலுள்ள காரைக்குடியில் தமிழ்த் தாயிற்கு கோவில் உள்ளது.

4) தமிழ் மொழி இலங்கை மற்றும் சிங்கப்பூரின் தேசிய மொழிகளுள் ஒன்று. மேலும் தெற்கு ஆப்பிரிக்கா, மலேசியா மற்றும் மௌரீசியசின் சிறுபான்மை மொழியாக அங்கீரிக்கப்பட்டுள்ளது.

5) தமிழ் பேரரசர் இராஜராஜ சோழர் தஞ்சை பெரிய கோவிலை காட்டினார். கோவில் கோபுர உயரம் 216 அடி! தமிழில் உயிர்மெய் எழுத்துக்கள் 216 ! சிவலிங்க உயரம் 12 அடி! தமிழில் உயிர் எழுத்துக்கள் 12 ! சிவலிங்க பீடம் 18 அடி! தமிழில் மெய் எழுத்துக்கள் 18! சிவலிங்கத்திற்கும் நந்திக்கும் இடையே உள்ள தூரம் 247 அடி! தமிழில் மொத்த எழுத்துக்கள் 247!


ஆஸ்டின் தமிழ்ப் பள்ளி

ஆஸ்டின், டெக்சாஸ் 78753

வணக்கம். என் பெயர் ஆதி. நான் இன்று நேர்மை பற்றி பேச போகிறேன். பெற்றோர்கள் சின்ன வயதிலிருந்து உண்மையே பேச வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார்கள். ஏனென்றால் பொய் சொன்னால் குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் பிரச்சனைகள் ஏற்படும். நான் நேர்மைக்கு உதாரணமா கதை சொல்ல போறேன்.



ஆதி


ஆதி
நிலை மூன்று


ஒரு ஊரில் ஒரு மரவெட்டி இருந்தார். அவர் மரம் வெட்டும் போது அவர் கோடரி தண்ணியில விழுந்திடிச்சு. ஒரு தேவதை உடனே தண்ணியிலே இருந்து வந்து அவருக்கு ஒரு பொன் கோடரி தந்தார். இது உன்னோடதா என்று கேட்டார். மரவெட்டி இல்லை என்று சொன்னார். தேவதை மீண்டும் தண்ணிக்குள்ள போயிட்டு ஒரு வெள்ளிக் கோடரி கொண்டு வந்தார். மரவெட்டி இதுவும் தன்னோடது இல்லைன்னு சொன்னார். கடைசியா தேவதை மரவெட்டியோட கோடரியை கொண்டு வந்தார். அவர் இது தன்னோடாதுன்னு சொன்னார்.அவருடைய நேர்மையை பார்த்து தேவதை அவருக்கு மூன்று கோடரிகளையும் பரிசாக கொடுத்தார். இது நேர்மைக்கு நல்ல உதாரணம்.

இப்போது இரண்டாவது கதை சொல்ல போறேன். ஒரு ஊரில் இரண்டு நண்பர்கள் ராமுவும், ரகுவும் இருந்தார்கள். ஒரு நாள் ரகு ராமுவிடம் 100 ருபாய் கடன் வாங்கினான். ஒரு மாதத்தில் திருப்பி தருவதாக கூறினான். ஆனால் ஒரு மாதம் கழித்தும் ரகு ராமிடம் காசு திருப்பி கொடுக்கல.

நீதி என்பது என்ன?

சுனந்தித்தா நிலை -5

நீதி என்பது நியாயத்தன்மையை நிர்வகிக்கும் சட்ட அல்லது தத்துவ கோட்பாடாகும். அதை நாம் தவறாக கூடாது. அது ஒரு தவறாமை.


சுனந்தித்தா
நிலை ஐந்து

நீதி கதைகள்

சிலப்பதிகாரம்

கண்ணகியும் கோவலனும் மதுரைக்கு வாழ்வதற்குச் சென்றார்கள். கோவலன் கண்ணகியின் சிலம்பை விற்க பொற்கொல்லரிடம் சென்றார். பொற்கொல்லர், இராணியின் சிலம்பை திருடியவன் கோவலன் என்று பாண்டிய அரசரிடம் முறையிட்டார். அரசர் ஆராயாமல் கோவலனை கொல்ல உத்தரவு இட்டார். கோவலன் கொல்லப்பட்டார். கண்ணகி அரசனிடம் முறையிட்டு அவரின் நீதி தவறானது என்று நிறுவினாள். அரசர் இதனால் உயிரை துறந்தார்.


சப்பாத்தி காசு

ஒரு காட்டில் இருவர் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் ஒரு வழிப்போக்கர் உணவு வேண்டும் .....

காமராஜர்

அதித்தி நிலை -5

காமராஜர் தமிழ்நாட்டுக்கு தலைவராக இருந்தார். அவர் நிறைய நல்ல விஷயங்களை தமிழ் நாட்டுக்கு செய்தார். காமராஜர் ஜூலை பதினைந்தாம் தேதியில் பிறந்தார். அவர் தந்தை ஒரு வணிகராக இருந்தார். காமராஜர், ஆறாவது வயதில், அவருடைய தந்தை காலமானார்.அவருடைய தாய் குடும்பத்தை வளர்ப்பதில் சிரமம் இருந்தது. அதனால் காமராஜர் பள்ளியிலிருந்து வெளியேறினார். அவருடைய தாய்க்கு உதவியாக வீட்டிலேயே தங்கினார்.



ஒரு இளம் வயதில் அவருடைய மாமாவின் அரசியல் கூட்டங்களுக்கு போனார். அவர் ஒரு ஆர்வம் அரசியலை வலுப்படுத்தினார்.அவர் அரசியலுக்கு ஆர்வம் காட்டினார்.அவர் பதினெட்டால் வயதில் அரசியலுக்கு போனார்.



காந்தி அவர்கள் தான் காமராஜரை ஈர்க்கப்பட்டு, அவர் கிராமத்தில் நிறைய நல்ல செயல்களை செய்தார். ஏழை மக்களுக்கு சாப்பாடு, தண்ணீர், தங்குமிடம் எல்லாம் காமராஜரே அவங்களுக்கு குடுத்தார். அவர் தமிழ்நாட்டுக்கு முதல் அமைச்சர் இருந்தார். அவர் கிராமத்தில் பள்ளிகளை உருவாக்கினார். பள்ளியில் மாணவர்களுக்கு இலவச சாப்பாடு கொடுத்தார். அவருக்கு கல்வி ரொம்ப முக்கியம். அவர் அனைவருக்கும் ஒரு நல்ல கல்வி கிடைக்கும் என்று அவர் விரும்பினார்.

ஜாக்சன்வில் தமிழ்ப் பள்ளி
ஜாக்சன்வில், பிளோரிடா

ஆண்டு விழா

ஜாக்சன்வில் தமிழ் பள்ளி ஆண்டு விழா நவம்பர் 10-ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. ஜாக்சன்வில் டௌன்டவுன் நூலகத்தில் அமைந்த அரங்கத்தில், இவ்விழா சுமார் மதியம் 2:30 மணிக்கு தொடங்கியது. தமிழுக்கும், தமிழை நாம் வளர்க்க சுதந்திரம் அளித்த இந்த நாட்டுக்கும் வாழ்த்து கூறும் விதமாக 'தமிழ் தாய் வாழ்த்தும், ஸ்டார் ஸ்பாங்ஹால்ட் பேனரும் பாடி விழாவின் முதல் அடியை எடுத்து வைத்தனர்.

‘நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செறுக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திரும்பு வதில்லையாம்!

பாரதி போற்றும் புதுமை பெண்களையும் , பெண்கள் போற்றும் பகுத்தறிவு நிறைந்த ஆண்களையும், பெற்றோர்க்கு பாடம் கற்பிக்கும் குழந்தைகளையும் வரவேற்க, அனுபவமிக்க ஆசிரியை ஒருவர் வரவேற்புரை அளித்தார். இயல் இசை மற்றும் நாடகம் இல்லாமல் தமிழ் இல்லை. இசையுடன் இசைவையும் இணைத்து, பாட்டுடன் பாவனையை பிணைத்து, பார்ப்பவர் கண்களுக்கு நடன விருந்தை அளிக்க, பழம் பெரும் நாட்டியமான பரத நாட்டியம் ஆடினார்கள் இரு மாணவர்கள். அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள தமிழ்ப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கான, தமிழ் வார்த்தை புலமையை வெளிக்காட்டும், FeTNA தமிழ்த் தேனீ தேசிய போட்டிகள், மே, ஜூன், ஜூலை மாதங்களில் நடைபெற்றது. எங்கள் மாணவர்களில் சிலரை பள்ளியில் தேர்வு செய்து, போட்டிகளில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்பட்டது. அவர்கள் கடைசி சுற்று வரை சென்று, பள்ளிக்கு பெருமையை தந்தனர். அதை பாராட்டும் விதமாக அவர்களுக்கு பதக்கம் வழங்கப் பட்டது.



உருவமில்லா இன்ப உணர்ச்சியே இசை. இசைக்கு உருவமில்லை, உயிர் இல்லை, அதனால் அதற்கு மரணமும் இல்லை. தீந்தமிழ் இசை பாடலை, சுவை மாறாமல் பாடியது, எங்கள் பள்ளியின் செல்ல குரல். தமிழ் இன்று வரை நிலைத்து நிற்கும் முக்கிய காரணம், அது ஒரு மொழி மட்டும் அல்ல. மொழியையும் மீறி, நம் அன்றாட வாழ்க்கையிலும், நம் பண்பாட்டிலும், நம் செயல்களிலும் இடம் பெற்றதே காரணம். இலக்கியங்களையும், இலக்கணங்களையும் நுகரும் எங்கள் பள்ளி மாணவர்களின், சிறப்பு கலைகளை காண்பிக்க துடிப்புடன் காத்திருந்தார்கள். மழலை முதல் நிலை 6 வரை உள்ள மாணவர்கள் அனைவரும் கலைகளை வெளிப்படுத்தினர்.

குழந்தை பேசும் கொஞ்சும் தமிழ், மிகவும் அழகானது. கொஞ்சும் தமிழில், பாட்டு பாடி, கள்ள சிரிப்புடன் அரங்கத்தை மெருகேற்றினர் எங்கள் மழலை செல்வங்கள்.
அவ்வையார், தொல்காப்பியர், உலகநாதர், உ.வே.ச மற்றும் ஆண்டாளின் அருமை பெருமைகளை போற்றும் வகையாக ஐந்து நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நம் பழக்க வழக்கங்களில் ஒன்று, விடுமுறைகளில் பாட்டி வீடு. நிலை 1 மாணவர்கள் பாட்டி வீட்டில் அவர்கள் மகிழ்ந்ததை பற்றி இசை வடிவமாகவும், மொழி வடிவமாகவும்

வெளியிட்டனர். டெக்னாலஜி வாழ்க்கையில் வளர்கின்ற இன்றைய மாணவர்களின் குறும்புகளை காட்ட, நகைச்சுவை நிறைந்த குறள்களை கூறி, அதன் வழி திருவள்ளுவரின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தினர் நிலை 3 மாணவர்கள்

இந்தியாவையும் தாண்டி மற்ற நாடுகளிலும் தமிழ் நிலைத்து வாழ காரணம், நம் பண்டைய பேரரசுகள். அவர்கள் செய்த போர்களும், வணிகமும் தமிழை பாரெங்கும் போற்றும் வண்ணம் நிறுவியது. அந்த அரசுகளின் படை திறன்களையும், அரசியலையும், மன்னர்களையும் பற்றி நிலை 4 மாணவர்களை உரை தந்தனர்.

விழாவின் மிக சிறந்த நகைச்சுவை நாடகமாக அமைந்தது **'நான் ஏன் தமிழ் படிக்கணும்?** நிலை 5 மாணவர்கள், யதார்த்தமாக மாணவர்களின் மன நிலையை கண் முன் கொண்டு வந்தனர். பெற்றோர் பிள்ளைகளின் பிணைப்பை நாடகமாக காட்டினர். இவர்களின் நடிப்பு திறன் கண்டு அரங்கமே சிரித்தது.

பட்டிமன்றம் இல்லமல் திருநாள் எப்படி நிறைவடையும்? டி.வி சேனல்கள் மாற்றும்போது ஆங்காங்கு ஒலிக்கும் சாலமன் பாப்பையாவோ, திண்டுக்கல் லியோனியோ, ராஜாவோ, பாரதி பாஸ்கரோ, எவரேனும் ஒருவரில் குரல் கேளாமல் பண்டிகை முடிதல் என்பது கடினம். அதுபோல ஒரு பட்டி மன்றம் நடைபெற்றது.

"பெற்றோர்கள், ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் வீட்டிலும், வீட்டிற்கு வெளியிலும் விதிமுறைகளை வித்தியாசப் படுத்துகிறார்கள் – இது சரியா? தவறா?

என்ற தலைப்பில் நிலை 6 மாணவர்கள் சிறப்பாக வாதமிட்டனர்.

பெரும் பாலும் அனைவரும் இந்த பாரபட்சத்தை உணர்ந்தே வளந்துள்ளோம். வெளியில் சென்று வீடு திரும்பும் நேரம், வீட்டு வேலைகள் செய்வதில், காதல் செய்வதில், கல்யாணங்களில், சொத்து விவகாரங்களில் என எல்லாவற்றிலும் வித்தியாசம் பார்த்து வளர்ந்துள்ளோம். இவை அனைத்தும் இந்தியாவில் தானே உள்ளது. இங்கு இல்லையே என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். ஆனால் தலைப்பை தேர்ந்தெடுத்தது மாணவர்கள் தான் என்பது அதிசயமாக இருந்தது.

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்



என்ற பாரதியின் திரு மொழிக்கு தலை வணங்கி, விழாவுக்கு அழைக்கப் பட்ட இதர மொழி பள்ளி ஆசிரியர்களை பூங்கொத்து கொடுத்து கௌரவ படுத்தினர். அவ்வாசிரியர்களும் தங்கள் வாழ்த்துக்களை பகிர்ந்தனர். விழாவின் கடைசி பகுதியாக 'கண் கட்டி வித்தை என்ற மாய வித்தை நிகழ்ச்சி நடைபெற்றது. நெருப்பிலிருந்து சாக்லேட் வந்ததையும், கிழிந்த பேப்பர்கள் தானாக சேர்ந்ததையும், செல்வங்கள் அதிசயமாக பார்த்து மகிழ்ந்தனர். ஆசிரியை ஒருவர் நன்றியுரை அளித்து விழாவை இனிதே முடித்தார்.

இந்தியாவை கடந்து வந்த பிறகும் மொழியையும் பண்பாட்டையும் மறக்காமல் வாழும் தமிழ் மக்கள் இல்லையேல், இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நிகழாது. இந்த விழா பெரும்பாலும் தமிழின் அனைத்து பக்கங்களையும் தொட்டு விட்டு வந்தது. முயற்சி திருவினை ஆகும், என்ற சொல்லுக்கு ஏற்றார் போல, அனைவர் எடுத்த முயற்சிகளுக்கும் தலைவணங்கி இந்த கட்டுரையை நிறைவு செய்கிறேன்

உறவுகளின் – அழைப்பும், அணைப்பும்

அக்ஷய கிருத்தி.



உறவுகளின் உணர்வுகளை உணர்வதும், புரிதலும் இன்று வரை எவராலும் எளிதாக செய்ய கூடிய செயலாக இருந்ததில்லை. சிலந்தியின் வலையில் சிக்கி தவிக்கும் சின்னஞ்சிறு பூச்சிகளை போல நாம் உணர்ச்சிகளின் வலையில் ஒவ்வொரு நாளும் தவித்துக் கொண்டிருக்கிறோம். இன்று வளர்ச்சிப் பெற்ற தொலைத்தொடர்ப்பு தொழில்நுட்பத்தால் ஒரு வகையில் நாம் அனைவரும் இணைந்தாலும், சில வருடங்கள் முன்பு நாம் உணர்ந்த தனிமையை அவ்வப்போது உணர்ந்துக் கொண்டே தான் இருக்கிறோம்.

காதலுக்கும் நட்புக்கும் நம் அனைவர் மனதிலும் தனி இடம் கொடுத்திருக்கிறோம். சில வருடங்கள் முன்னர் பெரும்பாலானோர் மனதில் ஒரு கருத்து நிலவி இருந்தது. பல வருடங்களாக தொடர்ப்புகளும், உரையாடல்களும், மறைந்திருந்தாலும் நட்பும் காதலும் அதே போல் நிலைத்து நிற்கும் என்று. இது அன்று இருந்த சூழ்நிலையில் முற்றிலும் உண்மை. அன்று இருந்த நாம் அன்புடையவர்களிடம் பகிர்ந்துக் கொள்ள முடியாமல் தவித்தாலும், அந்த தவிப்பு மறுபுறமும் இருக்கும் என்ற நம்பிக்கையில் மன நிறைவு பெற்று முன்னேரிக் கொண்டிருந்தோம். பிரிவுகளின் சலனங்களில் சிக்கினாலும் மறுபுற நபருக்கு நம் எண்ணங்களால் உறுவாக்கிய முகமூடியை பொருத்தி திருப்தி பெற்றிருந்தோம்.

ஆள் காட்டி விரலின் நுனியில், உலகை நொடியில் சுழற்றிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில், நாம் எதற்கும் முகமூடி இட்டு மூட விருப்பமில்லாதவர்களாக தான் இருக்கிறோம். இது ஒரு வகையில் சரியான பாதைதான். நினைத்த நேரத்தில் நினைத்தவர்களிடம் உரையாடி அனைத்தையும் கொட்டி விடுகிறோம்.

ஒருவர் நம் குறுந்தகவலுக்கும், அழைப்புகளுக்கும் சரியான மறு மொழி அளிக்காவிடில் கசப்பான எண்ணங்களை நம் மனதுக்குள் புகுத்தி விடுகிறோம். அது ஆருயிர் உறவுகளானால் ஏமாற்றம் நிலவுகிறது.

'Long distance relationships doesn't works out' என் நண்பர்களுள் சிலர் இந்த சொற்றொடரை பல முறை கூறியள்ளனர். நான் அன்று அதை பெரிதாக எண்ணியதில்லை. இன்று ஒரு வகையில் இது உண்மைதானோ என்ற எண்ணம் என்னிடம் வந்துள்ளது.

பிரிவு உண்மையான உறவுகளுக்கு உரமாகும். அளவுக்கு மீறிய உரம் உறவுகளை அழித்து விடும். உங்களுக்கு முக்கியமானவர்கள் என்று தோன்றுபவர் எவராயினும் தொடர்ப்பில் இருங்கள். இயந்திர வாழ்க்கையில் தான் அனைவரும் ஓடிக்கொண்டிருக்கிறோம். நின்று உறவுகளிடம் இளைபார வேண்டாம். ஓடிக்கொண்டே இருக்கும் ஒரு குரல் உங்களை அழைத்தால் பதிலுக்கு வார்த்தைகளில் அவர்களை அனைத்துக் கொள்ளுங்கள். அதற்கும் நேரமிலாமல் ஓடுகிறேன் என்று கூறுபவர்களை விட்டுவிடுங்கள், விட்டுச் சென்ற இடத்தில் மறுபடியும் சந்திபீர் அன்று நீங்கள் அணையுங்கள்.

உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காத வாழ்க்கை வாழ்வது வீண் என்று உணர்த்தி!!



ட்விட்டர் முத்துக்கள்

எழுதியவர் : இரம்யா இரவீந்திரன்

குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பதாலேயே தாயின் கருப்பைக்கும் இறைவன் குடிகொண்ட இடத்திற்கும் கருவறை என்றே பெயர் சூட்டினர் போலும்.#தமிழ் வாழ்க

தண்ணீருக்கு வடிவம் கொடுக்க முடியாது என்பவர்கள் பனிச் சிற்பங்களை கற்பனை செய்ய தவறியவர்கள்#முயன்றால் முடியாதது இல்லை.

ஒருவனுடைய இன்றைய நிலையை வைத்து அவனுடைய நாளைய உயரத்தை கணக்கிடுவது கூட்டு புழுவை வைத்து வண்ணத்து பூச்சியின் அழகை கணிப்பதை போன்றது.

பிரடெரிக் தமிழ்ப் பள்ளி, மேரிலாந்து தமிழ்க் கல்விக்கழகம்

நம் தமிழ் மொழி வெறும் தொடர்புக்கான ஊடகம் மட்டுமல்ல, அது நம் இனத்தின் வரலாற்று அடையாளம், கலாச்சாரத்தின் வெளிப்பாடு, மற்றும் சிந்தனையின் திறவுகோல். பிரடெரிக் வட்டாரத்தில் உள்ள தமிழ்க் குழந்தைகள் இதைக் கற்றுணர்ந்து தம் அடையாளத்தை பெருமையோடு கொண்டாடி வளரவேண்டும் என்பதே பிரடெரிக் தமிழ்ப் பள்ளியின் நோக்கம்.



தன்னார்வல ஆசிரியர்கள்:

1. திருமதி: நர்மதா ராஜ்குமார், முன் மழலை
2. திருமதி: வாணி ராமச்சந்திரன், முன் மழலை
3. திரு: அருண் பாலசுப்ரமணியம், முன் மழலை
4. முனைவர். சத்யா தர்மையா, மழலை
5. திரு: ரமேஷ் ஸ்ரீனிவாசன், மழலை
6. திரு: சிவக்குமரன் சுப்ரமணியன், ஒன்று
7. திரு: மஹேஷ் துரைசாமி, ஒன்று
8. திருமதி: தனலட்சுமி கணேஷ்,இரண்டு
9. திருமதி: விஜயா சுப்பராமன், இரண்டு
10. முனைவர். ராஜேஷ் தங்கப்பழம், மூன்று
11. திரு: சுசிந்தரன் விஸ்வநாதன், மூன்று
12. திருமதி: லாவண்யா சுப்ரமணியன், நான்கு
13. திருமதி: கீதா விஷ்வசாரதி, நான்கு
14. திரு: ரமணன் கந்தசாமி, ஐந்து
15. திரு: வெங்கட் தொப்பே, ஐந்து
16. திரு: ஹரிஹரன் நாராயணன், ஐந்து
17. திரு: சரவணன் பாரண்டப்பள்ளி, ஆறு
18. திரு: கணபதி சங்கரலிங்கம் ஆறு
19. திரு: ராம் பழனியப்பன், எட்டு
20. திருமதி: ஷோபா வெங்கடசாமி, எட்டு
21. முனைவர். பாலா குப்புசாமி, எட்டு

அமெரிக்கத் தமிழ் கல்விக் கழகம்....
பத்து ஆண்டுகள் நிறைவு!
இருப்பினும் உனக்கில்லை சோர்வு!
உன் பாடத்திட்டங்களோ கனிவு!
நீ வருங்கால சந்ததியினரின் தீர்வு!
உனக்கும், நம் தாய்த் தமிழுக்கும் இல்லை வரைவு!
அமெரிக்காவில் தமிழைக்காப்பதில் உன் முனைவு!
தொடரட்டும் உம் தமிழ்ப் பணி(வு)!

- முனைவர். பாலா குப்புசாமி.



"தமிழ்க் கற்றதனாலய பயன்"

ஜஸ்வர்யா பாலமுருகன், நிலை-8

ஒரு மனிதனை அடையாளப்படுத்துவதில் அவர் தாய் மொழிக்கு மிக முக்கிய பங்குண்டு. தாய் மொழியைக் கற்க மறந்தோர் தம் பண்பாட்டை மறந்து பிற நாட்டு கலாச்சாரத்திற்கு அடிமையாகிவிடுவர், சுயத் தன்மையையும் இழப்பர்.

மொழி என்பது உணர்வும் கூட, என் உணர்வை பிரதிபலிப்பதில் என் தாய் மொழியே சிறந்த ஊடகம். செம்மொழியாம் தமிழை, தாய் மொழியாகக் கொண்ட பெருமையில் அதன் பயனையும், என் அனுபவங்களையும் இங்கே பகிர்வதில் மகிழ்ச்சி.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே!
அதைத் தொழுது படித்திடடி பாப்பா!

என முழங்கிய முண்டாசுக் கவியின் கூற்றிற்கு ஏற்ப, எங்கள் பள்ளியில் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கும் தமிழ் வகுப்பில் ஆசிரியர்கள் எங்களுக்கு எளிய முறையில் தமிழைக் கற்பிக்கின்றனர். பேச்சு மற்றும் எழுத்துத் திறனை வளர்க்க பல்வேறு பயிற்சிகளும் தரப்படுகின்றது.

தமிழ் கற்கும்போது தமிழரின் வீரம் பண்பாடு நாகரிகம், மருத்துவம் மற்றும் கலை என அனைத்தும் கற்க நேரிடுகிறது. இதன் மூலம் கல்வி, கலை, கலாச்சாரம் என அனைத்தும் என் சந்ததி மற்றும் அடுத்த தலைமுறைக்கு பரிமாற்றம் செய்யப்படுகிறது. கல்லூரி மற்றும் உயர் படிப்பில் இரு மொழி முத்திரைக்கான அங்கீகாரமும் கிடைக்கின்றது. எனக்கு தமிழ் மொழியை சிறப்பாகக் கற்பித்த அனைத்து ஆசிரியர் பெருமக்களுக்கும், என் பெற்றோர்களுக்கும் நன்றிகளும் பணிவான வணக்கங்களும்.

தமிழ் கற்போம்! தமிழைக் காப்போம்!



தமிழ் துணுக்குகள் / செய்திகள்

சுபஸ்ரீ சுசிந்தரன், நிலை-8

தமிழ் மொழியும், தமிழரின் கடல்கடந்த பெருமையும் *"யாதும் ஊரே யாவரும் கேளிர்"* என்ற கணியன் பூங்குன்றனார் பாடல் வரிகளுக்கு ஏற்ப **தமிழ் மொழியும் , தமிழரின் கலாச்சாரமும்** உலகெங்கும் வளர்ந்து இருக்கிறது என்பதற்கு சான்றாக சில முக்கிய தகவல்களை பார்ப்போம். உலகப்புகழ் பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சியில் விழும் தண்ணீர் LAKE ERIE என்ற ஏரியில் இருந்து விழுகிறது. "ERIE" என்ற பெயர் "ஏரி" என்ற தமிழ் சொல்லிருந்து வந்தது. இதற்கு காரணம் அங்கு காமாட்சி (COMANCHE) என்ற பழங்குடியினர் தமிழ் மொழி பேசி இருக்கிறார்கள். இவர்களே இந்த ஏரிக்கு LAKE ERIE என்ற பெயர் வைத்துள்ளனர். இது மட்டும் இல்லாமல் "ERIE"என்ற ஊர் பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ளது.

KOOTENAY COLUMBIA என்ற பெயர் உள்ள இடம் கனடாவில் உள்ளது. இதன் பெயர் காரணம் நம் தமிழர்கள் பண்டைய காலத்தில் சோலி, முத்து, பவளம் போன்றவைகளை வணிகம் செய்வதற்கு கூட்டணியாக கனடா சென்றனர். அந்த மக்களின் பெயர் கூட்டணி . அவர்கள் பேசும் மொழியில் தமிழ் உள்ளது. இவர்கள் வணிகம் செய்த இடம்தான் "KOOTENAY COLUMBIA" என்று உருவாகியுள்ளது. "KOOTENAY" என்ற பெயர் "கூட்டணி" என்ற தமிழ் சொல்லிருந்து வந்தது. இன்றும் கனடாவில் கூட்டணி என்ற மக்கள் வாழ்கிறார்கள்.

மெக்ஸிகோவில் தமழிபாஸ் (TAMAULIPAS) என்ற இடம் உள்ளது. அங்கு வாழும் மக்கள் இன்றும் தமிழரின் கலாச்சாரம் சார்ந்த சமையல் முறைகளை பயன்படுத்துகிறார்கள்.

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்

தமிழ்ப் பள்ளிகளில் நீ ஒரு முத்து!
மேரிலாந்து தமிழ்க் கழகம் எடுத்தது உனை தத்து!
தன்னார்வலர்கள் உம் சத்து!
உன் வயதோ பத்து!
மாணவச்செல்வங்கள் உம் கொத்து!
அனைத்து செயல்களிலும் நீ கெத்து!
தொடரட்டும் உம் சித்து!

-முனைவர். பாலா குப்புசாமி
பிரடெரிக் தமிழ்ப் பள்ளி

உலக நாடுகளில் பழங்குடியினர் பேச கூடிய மொழிகளில் அம்மாவை குறிக்கும் சொல் அங்கா, ஆயி , ஆத்தா, அம்மா "ANGAA-AYI-AATHAA-AMA". இன்றும் ஆஸ்திரேலியா , சிக்கிம் போன்ற நாடுகளில் அம்மாவை "ஆயி" என்று அழைக்கிறார்கள்.

இன்றும் ஆப்பிரிக்காவில் "CAMEROON" என்ற இனத்தை சார்ந்த மக்கள் தமிழ் மொழியை பேசுகின்றனர்.

உலகம் முழுவதிலும் 19,000 ஊர் பெயர்கள் தமிழில் உள்ளது.

இன்று உலகில் 6500 பேசும் மொழிகள் நடை முறையில் உள்ளது. இதில் 465 சொற்கள் பொதுவான சொற்கள், அதில் 300 சொற்கள் தமிழ் சொற்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த செய்திகள் அனைத்தும் தமிழ் மொழி ஆய்வாளர் திரு.ரா.சிவ.பாலசுப்பிரமணி அவர்களின் ஆய்வுபடி எடுத்த செய்திகள்.

தமிழை வணங்குவோம்!! தமிழால் இணைந்து தமிழை வளர்ப்போம்!!!

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு!

சாரதா நாராயணன், நிலை-6

ஆங்கிலத்தில் "TEAM" என்ற வார்த்தை உண்டு. ஒரு குழு அல்லது அணியினைக் குறிக்கும் சொல் அது. இதற்கு உண்மையான விளக்கம் அல்லது விரிவாக்கம் என்னவென்றால், "Together Everyone Achieves More" என்பதாகும். அனைவரும் ஒன்றுபட்டு முயன்றால் நம்மால் நிறைய சாதிக்க முடியும் என்பதே இதன் பொருள்.

சமீபத்தில் நான் ஒரு நிகழ்வினைப்பற்றி கேள்விப்பட்டேன் . என்னை மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்த்திய உண்மை சம்பவம் அது!

அமெரிக்க மாகாணங்களில் ஒன்றான பாஸ்டன் நகரில் ஒரு விசித்திரமான போட்டி நம் அமெரிக்க ராணுவ வீரர்களின் நலனுக்காக நிதி திரட்டும் முகாமாக நடை பெற்றது. சும்மா ஒரு கேளிக்கையாக "யார் நெடு நேரம் கைதட்டல் நிகழ்த்தி பரிசினைப் பெறுகிறார்கள் என்று பார்ப்போம்" என்று நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் ஒலிபெருக்கியில் அறிவித்தனர். அதனைக் கேட்டு பலரும் இது ஒரு பெரிய வேலையா? என்னால் நன்றாக செய்ய முடியுமே என்று இறுமாந்து போய் உற்சாகமாக கைதட்ட ஆரம்பித்தனர். சிறிது நேரம் கடந்தது, மெதுவாக கூட்டத்தில் உள்ளவர்களுக்கு அலுப்புத்தட்ட ஆரம்பித்தது. சில மணி நேரம் கடந்ததும் மக்கள் அந்த அறையை விட்டு வெளியேறத் தொடங்கினர். இன்னும் சில மணிநேரம் கடந்தது. மீதம் உள்ள மக்களும் உற்சாகத்தை இழக்க த் த் தொடங்கினர்.

கொஞ்சம் கொஞ்சமாகக் கைதட்டல் சத்தம் குறைந்தது. அப்புறம், ஒரே சீராக ஒருவரின் சத்தம் மட்டுமே கேட்கத் தொடங்கியது. நடுவர்களுக்கு ஒரே ஆச்சரியம்! யார் இந்த மா மனிதர்? எப்படி இவருக்கு இவ்வளவு பொறுமையும், ஊக்கமும் உள்ளது? என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டனர். அப்போது தான் அவர்களுக்கு அங்கே ஒரு ஆச்சரியம் காத்து இருந்தது!

அங்கே கை தட்டி கொண்டிருந்தது ஒருவர் அல்லர், இருவர்!! இருவருமே முன்னாள் ராணுவ வீரர்கள். போர்க்களம் கண்டு அங்கே தங்கள் ஒரு கையினை இழந்தவர்கள். ஒருவருக்கு வலக்கையும், இன்னொருவருக்கு இடக்கையும் இல்லை. இருந்தாலும் தம்முடைய இலக்கு தம்மைப்போன்ற ராணுவ வீரர்களுக்கு உற்சாக மூட்டுவதும் தம்மாலான சேவை செய்வதும் என்பதால், தங்களுடைய குறைபாட்டையும் நிறைவாக்கி நம் அனைவருக்குமே ஒரு எடுத்துக்காட்டாய் உயர்ந்து நின்றார்கள். இந்த நிகழ்வு என் மனதை மிகவும் தொட்ட ஒரு நிகழ்வு. அது மட்டும் அல்லாமல் நம் அனைவருக்குமே ஒரு வாழ்க்கைப் பாடம்! நாம் ஒன்று பட்டால் உண்டு வாழ்வு !!

எனவே நண்பர்களே, நாம் தமிழால் ஒன்று படுவோம், தமிழால் இணைந்து வளர்வோம், தமிழை இணங்கி வளர்ப்போம் !!! நன்றி!

தமிழை வணங்குவோம்!! தமிழால் இணைந்து தமிழை வளர்ப்போம்!!!



கற்பித்தலில் இனிமை

ஆசிரியை. இரம்யா இரவீந்திரன்

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற நறுந்தொகை வரிகள் ஆசிரியரை தெய்வ நிலையில் வைக்கிறது. ஒரு தாயும் தந்தையும் தத்தம் மக்களுக்கு மட்டுமே நன்னெறியை போதிப்பர். ஆனால் ஒரு சமூகத்தின் எதிர்காலம் என்றழைக்கப்படும் மாணவ செல்வங்களுக்கு கல்வியுடன் சேர்த்து ஒழுக்கம், சமூக அக்கறை, வாழ்வியல் நெறிகள் என்ற பலவற்றை கற்பிக்கும் ஒருவர், ஆசிரியர் என்ற நிலையில் இருந்து குரு என்ற நிலைக்கு உயறுகிறார். கல்வியை அளிப்பவர் ஆசிரியர், ஞானத்தை போதிப்பவர் குரு. இராமகிருஷ்ணர்-விவேகானந்தர், மீனாட்சிசுந்தரம்-உ.வே. ஸ்வாமிநாதய்யர், வீர சிவாஜி- சமர்த்த ராமதாஸ் என்று குருவால் பெருமை அடைந்த சீடர்களும்,சீடர்களால் ஏற்றம் பெற்ற குருவும் நமது வரலாற்று பக்கங்களில் ஏராளம் உண்டு.

எந்த செல்வத்திற்கும் இல்லாத பெருமை கல்விக்கு உண்டு. கல்வி கள்வர்களால் களவாட முடியாதது, நெருப்பால் அழியாது, கொடுக்க கொடுக்க வளரும் செல்வம் கல்வி மட்டுமே. ஒருவரின் அறியாமை இருளை அகற்றி ஞான விளக்கை ஏற்றும் ஆசிரியர் அந்த ஒரு மாணவனை மட்டுமன்றி அவன் பின் தோன்றும் பல தலைமுறைகளை அறியாமை இருளில் இருந்து வெளிச்சத்திற்கு அழைத்து வருகிறார்.எனக்கு நூறு இளைஞர்களை தாருங்கள் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கி காட்டுகிறேன் என்றார் விவேகானந்தர். ஒரு நல்ல ஆசிரியர் எத்தகைய சிறந்த சமூக தாக்கத்தை உருவாக்க முடியும் என்பதற்கு இதை விட சிறந்த எடுத்துக்காட்டை கூற முடியாது. இன்றும் இந்தியாவில் கிராமப்புற ஏழை மாணவர்களுக்குயென்று தங்கள் சொந்த செலவில் பாடபுத்தகம், சீருடை, மடிக்கணினி, மற்றும் தேர்வுக்கட்டணம் கொடுத்து அவர்கள் வாழ்வில் உறுதுணையாய் நிற்கும் பல ஆசிரியர்கள் உள்ளனர்.

நல்ல ஆசிரியர் என்பவர் கற்பித்தலை ஒரு சுமையாக கருதுவதில்லை. மாணவ சமுதாயத்தை தன்னிறைவு பெறச் செய்யும் ஒரு உன்னத சேவையாகவே ஆசிரியப் பணியைக் கருதுவார்.ஒரு தீக்குச்சியின் பெருமை அது எவ்வளவு சீக்கிரம் நெருப்பை உண்டாக்கியது என்பதில் இல்லை. அதன் பெருமை அதன் குறைந்த ஆயுளுள் அது எத்தனை மெழுகுவர்த்திகளை ஏற்றியது, எவ்வளவு இருளை விரட்டியது என்பதில் இருக்கிறது. வாழையடி வாழையாக தன காலத்திற்கு பின்னும், தன்னுடைய சீரிய கருத்துகளால் இச்சமூகத்தை செம்மைப்படுத்தும் பணியை தன்னிடம் பயின்ற மாணவர்கள் மூலம் செய்யும் ஆசிரியருக்கு, கற்பித்தல் என்பது பனிமலர் ஏறிய தேனை போன்று என்றும் இனிமையானது.



நான் உயிரோடு இருப்பதற்கு என் தந்தைக்கு கடமை பட்டிருக்கிறேன். ஆனால் சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்கு கடமை பட்டிருக்கிறேன் என்றான் மாவீரன் அலெக்சாண்டர்.

உங்களுடைய வகுப்பு எனக்கு மிகவும் பிடிக்கும். அதனாலேயே நான் உங்கள் வகுப்பை தவற விடுவதே இல்லை என்று மாணவர்கள் தரும் ஊக்கத்தையும், பெருமிதத்தையும் உலகில் உள்ள எந்த செல்வத்தாலும் ஈடு செய்ய முடியாது. குழல் இனிது யாழ் இனிது என்பார் தத்தம் மாணாக்கர் சொல் கேளாதோர் என்பது புது வாக்கு. வட அமெரிக்கா முழுவதும் உள்ள தமிழ்ப் பள்ளிகளில் தன்னார்வலர்களாக ஆசிரியப் பணியில் இணைந்திருக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் மட்டுமே உரித்தானது இந்த இனிப்பான, உவப்பான பெருமை.

மத்திய புளோரிடா தமிழ் பள்ளி

தமிழ் மொழி நம் தமிழ் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் அடித்தளம்.பண்பாட்டின் மிகப்பெருங் கருவூலம். கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த குடியின் வழிவந்த நாம் தீந்தமிழை கற்றுக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற மகாகவி பாரதியாரின் வரிகளை உயிர்ப்பிக்கும் வண்ணம் தமிழார்வலர்கள், சான்றோர்களால் மத்திய புளோரிடா கேசல்பரியில் தமிழ்ப்பள்ளி அக்டோபர் 2 2017 முதல் அமையப்பெற்று நமது தமிழ் மொழியை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் அரிய பணியை செய்து வருகிறது. இப்பள்ளியானது அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகத்தின் அங்கீகாரத்துடன் செயல்பட்டு வருகிறது. மழலையர் மற்றும் நிலை 1 முதல் நிலை 5 வரை வகுப்புகள் உள்ளன. ஞாயிற்றுக்கிழமையில் மாலை 3 மணியிலிருந்து 5 மணி வரை வகுப்புகள் நடைபெறுகின்றன. இதில் முதல் ஒன்றரை மணி நேரம் தமிழ் பாடமும் மற்றும் 30 நிமிடம் பாட்டு, நடனம், சிலம்பம் போன்ற தமிழ்க்கலைகள் தன்னார்வலர்களால் நடத்தப்படுகின்றன. ஆண்டுதோறும் சங்கே முழங்கு என்ற நிகழ்ச்சி மூலம் தமிழில் வார்த்தை விளையாட்டு,விடுகதை மற்றும் பண்டைய தமிழ் விளையாட்டுகள் போன்றவை நடத்தப்பட்டு, இதில் அனைத்து குழந்தைகளும் பங்கேற்று, அனைவருக்கும் பரிசு கொடுத்து ஊக்குவிக்கிறோம். தமிழார்வலர்கள், தன்னார்வலர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரும் இணைந்து, அனைத்து மொழிகளுக்கும் தாய்மொழியான நம் செம்மொழித் தமிழை நம் குழந்தைகளுக்கு எடுத்துச் செல்லும் அரிய பணியை மத்திய புளோரிடா தமிழ்ப்பள்ளி செய்து வருகிறது என்றில் அது மிகையாகாது.

தமிழ் வாழ்க!! தாய் தந்த தமிழ் வாழ்க!!



பட்டினி கிடந்தது பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்திடினும்
கட்டி இழுத்து கால்கை முறித்து அங்கம்
பிளந்து இழந்து துடிதிடினும் பொங்கு
தமிழை பேச மறப்பேனோ.....

சான் ஃபிரான்சிஸ்கோ விரிகுடாப் பகுதி, கலிஃபோர்னியா

மின்னஞ்சல்: principal@peninsulatamilschool.org



2020-இல் பட்டம் பெறும் வகுப்பு



மேல் வரிசை:
அஷ்வின் வசந்த், பவித்ரா ராஜன், ஸ்ருதி ராமநாதன், பிரித்திகா தணிகைவேலன், சாய்கீர்த்தனா சங்கர்

கீழ் வரிசை:
ராம் ஆவுடையப்பன் (ஆசிரியர்), ராஜன் மாதவன் (உதவி ஆசிரியர்)

தீபகற்ப தமிழ் பள்ளி - ஆண்டு விழா

















ராஜாங்கம்

வாருங்கள் தமிழோடு விளையாடலாம்














மேல் வரிசை:

ராம் ஆவுடையப்பன், அறிவழகன் சம்பந்தம், வசந்த் ஜானகிராமன் , பத்மகுமார் நாகராஜன், ராம்ஜி சேதுராமன், ராஜன் மாதவன், ஜெயஸ்ரீ காசிநாதன், எஸ். சிவநீலம், சூசன் ஜோசப், வளர்மதி ஆசைத்தம்பி, பிரியா மோஹனராஜன்.

கீழ் வரிசை:

லாவண்யா ராம், சௌந்தர்யா வசந்த், லதா ராம்ஜி, சந்தியா கிருஷ்ணன், ஜெயபாரதி ஜோதிமணிகாந்தன், சச்சுதா செல்வகுமார், ஸ்ரீலதா சாயிகுமார், கவிதா கண்ணபிரான்.

பிளேனோ தமிழ் பள்ளி



மரம் வளர்ப்போம் – ஏன்?

அபினவ் குமரகுருராஜ்

முன்னுரை:வாழ்க்கைக்கு நம் எல்லோருக்கும் மூன்று விஷயங்கள் தேவை. தூய்மையான காற்று, சுத்தமான நீர், தங்குவதற்கு ஓர் இடம். இம்மூன்றையும் இதற்கு மேலும் தருவது மரம். நாம் எல்லோரும் உயிர் வாழ மரம் மிகவும் முக்கியம். அப்படிப்பட்ட விலை மதிப்பில்லாத மரத்தை நாம் மனிதர்கள் போற்றி பாதுகாக்க வேண்டாமா?

மரத்தால் வரும் நன்மைகள்

மரத்தால் பல நன்மைகள் ஏற்படுகின்றன என்று நமக்கு தெரியும். வாழ்வதற்கு அவசியமான பிராண வாயு கொடுத்து, ஆயிரக்கணக்கான உயிரினங்களுக்கு வீடு கொடுப்பது மரம் தான். மேலும் மரம் வளர்ப்பதால் கிடைக்கும் நன்மைகள் பல.

அவை பின்வருமாறு

* ஒரு மரம் ஒரு இயற்கையான குளிரூட்டியாக பயன்படுத்தலாம். இருபது மணிநேரம் வேலை செய்யும் பத்து குளிரூட்டிகளுக்கு இது சமமாகும்.
* பச்சை வண்ணம் மனதை அமைதி படுத்தி கண்ணின் அழுத்தத்தை குறைக்கிறது.
* மரம் சத்தத்தை உறிஞ்சி தடுக்கிறது. சத்தம் மாசுபாட்டை நாற்பது சதவீதம் குறைக்கிறது.
* மரங்கள் வெப்பம் தணிக்கும்.
* மரங்கள் நிலத்தடி நீரை காக்கும்.
* பூ, காய், பழம் போன்ற உணவு வகைகள் கிடைக்கும்.
* மழை பெய்ய உதவும்.
* பறவைகளுக்கும், தேனீக்களுக்கும் சரணாலயம் ஆகும்.
* மரங்கள் மண் அரிப்பைத் தடுக்கும்.
* மரம் இயற்கை உரம் தரும்.
* மரம் இயற்கை சீற்ற அழிவை தடுக்கும்.



* மரம் தூய்மையான காற்றும் நீரும் தரும்.
* நிழல் தரும்.

<u>மருத்துவ குணங்கொண்ட மரங்கள்</u>

மருந்தாகி தப்பா மரத்தாற்றல் செல்வம்
பெருந்தகை யாண்கன் படின் --

திருக்குறள் 217

உதவி செய்யும் பெரு மதிப்பிற்க்கு உரியவர்களிடம் சேரும் செல்வம் எப்படி மக்களுக்கு உதவியாக இருக்கிறதோ அதுபோல மருத்துவ குணங்கள் உடைய தாவரம் நோய் குணப்படுத்தி சிறப்பு பெறும்.

வேப்ப மரம் நட்டு வைத்தால் வைத்தியர் தேவையில்லை.
* வேப்பம்பூ ரசம் பித்தத்தைக் குறைக்கும்.
* வேப்பம்பூ போடி மற்றும் மஞ்சள் தோல் வியாதியை நீக்கும்.
* வேப்பிலை சாப்பிட்டால் வயிற்று பூச்சி ஒழியும்.
- நம் தேசத்தில் குறிப்பாக தமிழகத்தில் பாரம்பரியமாக ஆன்மீக சடங்குகளில் மட்டும் இல்லாமல் நோய் தீர்க்கும் மூலிகையாகவும் அதிகமாக பயன்பட்டு வருவது வேம்பு.

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் ரெண்டும் சொல்லுக்குறுதி"

இதில் ஆல் என்றால் ஆலமரம், வேல் என்றால் வெப்ப மரம்.
ஆல மரக்குச்சி பல்லுக்கு இயக்கையான உறுதி தரும். ஆழ மரத்தின் இலைகள், பட்டைகள் எல்லாம் மருத்துவ குணம் உடையவை.

வாழை மரம்
வாழை மரத்தின் சிறப்பு என்னவென்றால் அதன் அனைத்து பாகங்களும் மக்களுக்கு பயன்படுகின்றன. காய், பழம், தண்டு - உணவு. இலை - இயக்கையான தட்டு. நார், மரக்கழிவு - துணி மற்றும் காகிதம் தயாரிக்க பயன்படுகிறது.

பனைமரம்
"தமிழகத்தின் மாநில மரம் பனை மரம்"

பூலோகத்தின் கற்பகத்தரு என்று அழைக்கப்படும் பனை மரத்தின் அருமை தெரியாத மனிதர்களால் தற்போது அழிவின் விளிம்பில் உள்ளது. நுங்கு, பதநீர், பனங்கிழங்கு - உணவு. மட்டை, தண்டு - வீடு கட்டவும் மற்றும் தூண் அமைக்கவும் பயன்படுகின்றன.



கருத்துரை

மரம் வளர்ப்போம்
மழை பெறுவோம்
விண்ணின் மழைத்துளி

இயற்கையோடு வாழ்வோம்
இயற்கையை காப்போம்

புவி வெப்பம் அடைவதால் மனித இனம் அழிவை நோக்கி செல்லும் கட்டாயத்திற்கு உட்பட்டுள்ளது. இந்நிலையில் 'வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்' என்று பேசும் நிலை மாறி 'ஆளுக்கு ஒரு மரம் வளர்ப்போம்' என்ற நிலைக்கு வந்துள்ளோம். இயற்கையை பாதுகாக்கும் முதல் காரணியான மரங்கள் இல்லாமல் இந்நிலையே நீடித்தால் 'இன்னும் பாத்து ஆண்டுகளில் தமிழகம் பாலைவனமாகும்' என்ற ஆய்வின் கூற்று நம்மை எச்சரிக்கை செய்கிறது



முடிவுரை

மரம் வளர்க்கும் மனங்களை வளர்ப்போம். எனவே அன்பர்களே

மரம் வளர்ப்போம்!

காடுகளை உருவாக்குவோம்!

மழை பெறுவோம்!

பசுமையான பூமி அடைவோம்!

இது நம்மால் முடியும்! உங்களாலும் முடியும். செய்வீர்களா?



மரம் வளர்ப்போம்

சக்திவிருக்ஷா

முன்னுரை:

மரங்கள் பூமியின் வரன்கள். காற்று, மழை, வெயில், பனி ஆகியவற்றை தாமே தாங்கி நம்மை காக்கின்றன. பிறர்க்கெனவே வாழும் இம்மரங்கள் உன்னதமான படைப்புகளே! எவ்வாறு மேன்மக்களிடம் செல்பவர்கள் வேண்டிய பொருட்களை பெறாமல் திரும்ப மாட்டார்களோ, அவ்வாறே வேண்டிய பொருட்களை தந்து அணைத்து உயிரினங்களுக்கும் வாழ்வளிக்கும் இம்மரங்களின் பிறப்பே தாய் சிறந்த பிறப்பாகும்.

பொருளுரை:

